**இந்தியத் துணைத் தூதரகம்**
**யாழ்ப்பாணம்**

**ஊடக அறிக்கை**

யாழ். இந்திய துணைத் தூதரகம் “ஆசாதி கா அம்ரித் மஹோற்சவ்” கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, யாழ். வாலிப கிறிஸ்தவ சங்கத்தினருடன் (YMCA) இணைந்து, இன்று (நவம்பர் 18, 2021) வை எம் சீ ஏ மண்டபத்தில் இரத்த தான முகாம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.

2. நிகழ்வினை, மாண்புமிகு இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ், வை.எம்.சி.ஏ. தலைவர் திரு. ஆர். வினோத், யாழ்ப்பாணம் சிட்டி மிஷன் தேவாலயத்தின் தலைவர் அருட்தந்தை அந்தோணி சுதாகர், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பிரதி அதிபர் அருட்தந்தை தேவமித்திரன் மற்றும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரி ஸ்ரீ ஜெயபாஸ்கரன் அவர்களால் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். மாண்புமிகு யாழ் நகர முதல்வர் வி.மணிவண்ணன் அவர்களும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தார். இந்தியத் துணைத் தூதுவர் மற்றும் இந்தியத் தூதரகத்தின் 10 அதிகாரிகள் உட்பட 22 தன்னார்வலர்கள் இரத்த தானம் செய்தனர்.

3. இந்திய சுதந்திரத்தின் 75-வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் வகையில் யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகம் ஏற்பாடு செய்துவரும் தொடர் நிகழ்வுகளின் ஒரு பகுதியாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. யாழ் இந்திய துணைத் தூதரகம் இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திலும் இரத்த தான முகாம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

4. நிகழ்வுகளின் புகைப்படங்கள் சில இணைக்கப்பட்டுள்ளன.

**18 நவம்பர் 2021**

**யாழ்ப்பாணம்**